# WIDOWS AND POVERTY IN VANTHARUMOOLAI - WEST

(A SOCIOLOGICAL RESEARCH)

LIBRARY
16 AUG 2012
Eastern University, Sri Lanka.

MISS. SETHUNATHAN SUTHAJINI
REG.NO: EU/IS/2005/AC/75
INDEX NUMBER: CS 2569

FAC84
Project Report
Library - EUSL

This thesis has been submitted to the Department of Social Sciences of Eastern University, in 2011 as a partial fulfillment for the special degree of Bachelor of Arts in Sociology & Anthropology.

84

DEPARTMENT OF SOCIAL SCIENCES
FACULTY OF ARTS & CULTURE
EASTERN UNIVERSITY
VANTHARUMOOLAI
SRILANKA

PROCESSED
Main Library, EUSL

# முன்னுரை

உலகமயமாக்கலினூடாக சமூகமானது ஒருபுறம் வளர்ச்சியடைந்தாலும் மறுபுறம் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய பிரச்சினைகள் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக அமைவதனை அவதானிக்க முடிகின்றது. சமூக வளர்ச்சிக்குச் சமூகக் கட்டமைப்பு முக்கியமானதாகும். சமூகக் கட்டமைப்பு சீர்குலையும் போது சமூக அபிவிருத்தியும் கேள்விக் குறியாக மாறுகின்றது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு சமூகத்தில் நிலவுகின்ற சமூகப் பிரச்சினைகளை அடையாளங் கண்டு அதற்குத் தீர்வு காண்பதன் மூலம் குறிப்பிட்ட சமூகத்தின் அபிவிருத்தியை நேர்கோட்டுப் பாதையில் கொண்டு செல்லலாம். அத்துடன் ஆண், பெண் சமத்துவம் என்பது சமூக வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

நாடொன்றின் அபிவிருத்தி, அதன் சமாதான நிலை என்பவற்றிற்கான மிகப் பெரிய அச்சுறுத்தலாகவும், சவாலாகவும் வறுமை அமைந்திருப்பதாகக் காணப்படுகின்றது. கடந்த சில தசாப்தங்களாக வறுமையினை வரைவிலக்கணப்படுத்தல், அதனை அளவிடுதல், வறுமையின் தாக்கத்தினைக் குறைக்கும் முகமாக தேசிய சர்வதேச, மட்டத்தில் கொள்கைகள் பல வடிவமைக்கப்பட்டு அவற்றில் புதிய முறைகளைக் கையாண்டு நிறைவேற்றுதல் போன்ற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உண்மையில் மனிதனது தோற்றக்காலம் முதற்கொண்டு அவனது தேவைகளில் காணப்பட்ட பற்றாக்குறை நிலையினை நீக்கும் முயற்சிகள் இடம் பெற்றுக்கொண்டே இருக்கின்றன. மேற்கொள்ளப்பட்ட அம் முயற்சிகளின் நோக்கினைக் கருத்தில் கொள்ளும் பொழுது அது தனியே மனிதத் தேவைகளின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல் என்பதற்கு அப்பால் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல் என்கின்ற எண்ணக்கருவினை உள்வாங்கியிருந்தமையினையும் தெளிவாகக் காணலாம். இன்றைய நவின வறுமை ஒழிப்பு அணுகுமுறைகள் பெரும்பாலும் இதனையொத்த மையக் கருத்தினை அடி நாதமாகக் கொண்டு வறுமைக் குறைப்பு முயற்சிகளை செயற்படுத்தி வருகின்றன எனலாம்.

இந்தவகையில் எனது சமூகவியல் சிறப்புக் கற்கையினைப் பூர்த்தி செய்யும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்திலே ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வந்தாறுமூலை மேற்குக் கிராமத்தில் கணவனை இழந்த பெண்கள் குடும்பப் பொறுப்பை தனியாக ஏற்று வாழ்வதன் காரணமாக அவர்கள் பல்வேறு சமூக, பொருளாதார, கலாசார ரீதயியாகப் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு “கணணை இழந்த பெண்களும் வறுமையும்” என்னும் தலைப்பிலான இவ் ஆய்வுக் கட்டுரையானது ஐந்து அத்தியாயங்களைக் கொண்டதாக அமைகின்றது.

அந்தவகையில் முதுலாவது அத்தியாத்தில் ஆய்வு பற்றிய ஒரு அறிமுகத்தினையும், இரண்டாவது அத்தியாயத்தில் ஆய்வுத் தலைப்புத் தொடர்பான நூலாய்வு விளக்கத்தினையும், மூன்றாவது அத்தியாயத்தில் ஆய்வுப் பிரதேசம் பற்றிய அறிமுகத்தினையும், நான்காவது அத்தியாயத்தில் ஆய்வு விடயம் தொடர்பாக பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கணவனை இழந்த பெண்களின் வறுமைக்கான காரணங்கள், அவாகள் வறுமையினால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றை இனங்கண்டு கூறியதுடன் ஐந்தாவது அத்தியாயத்தில் ஆய்வுப் பிரச்சினை பரிசீலனை, கருதுகோள் பரிசீலனை, கோட்பாட்டு பரிசீலனை மற்றும் ஆலோசனைகளும் சிபாரிசுகளும் என்பவற்றுடன் முடிவுரையும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ் ஆய்விற்கென சேகரித்த தரவுகளின் உண்மைத்தன்மை மற்றும் ஏனைய சமூக, பொருளாதார, கலாசாரக் காரணிகளின் செல்வாக்கானது இவ் ஆய்வின் நிச்சயத் தன்மையை நிர்ணயிப்பனவாக உள்ளன. எனவே வினாக்கொத்து, நேர்காணல், கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளின் அடிப்படையில் கணவனை இழந்த பெண்கள் வறுமையின் காரணமாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் முகமாகவும், அவற்றுக்குரிய தீர்வு, ஆலோசனைகளை வழங்கும் முகமாகவும் இவ் ஆய்வுக் கட்டுரையினை எழுதியுள்ளேன்.

**ஆய்வாளன்.**

# பொருளடக்கம்

| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | |
| நன்றியுரை | |
| உறுதியுரை | |
| அட்டவணைகள் | |
| வரைபடங்கள் | |
| **அத்தியாயம் ஒன்று** | **1-11** |
| **1.0 ஆய்வு அறிமுகம்** | |
| 1.1 அறிமுகம் | 1-2 |
| 1.2 ஆய்வுப் பிரச்சினை | 2 |
| 1.3 ஆய்வு வினாக்கள் | 3 |
| 1.4 ஆய்வுக் கருதுகோள் | 3 |
| 1.5 ஆய்வுக் கோட்பாடு | 4-5 |
| 1.6 ஆய்வின் நோக்கங்கள் | 5 |
| 1.7 ஆய்வு முறைமையியல் | 5-6 |
| 1.8 தரவு சேகரித்தல் முறைகள் | 6-7 |
| 1.9 மாதிரிகள் | 7-8 |
| 1.10 தரவுப் பகுப்பாய்வு | 9-10 |
| 1.11 ஆய்வின் எல்லை | 10 |
| 1.12 அத்தியாய விளக்கம் | 10-11 |
| **அத்தியாயம் இரண்டு** | **12-57** |
| **2.0 ஆய்வுத் தலைப்பு தொடர்பான நூலாய்வு** | |
| **2.1 கணவனை இழந்த பெண்களும் பண்பாட்டுக் கூறுகளும் கோட்பாட்டுப் பார்வை** | |
| 2.1.1 அறிமுகம் | 12 |
| 2.1.1.1 நெறிமுறைகள் | 13-14 |
| 2.1.1.2 விழுமியங்கள் | 14-15 |
| 2.1.1.3 வழக்காறுகள் | 15-16 |
| 2.1.14 குடி வழக்குகள் | 16 |

2.1.15 சமூகச் சட்டங்கள் 17

2.1.1.6 நாட்டார் வழக்குகள் 18

**2.2 கணவனை இழந்த பெண்களும், சமூகக்கட்டுப்பாடுகளும் கோட்பாட்டுப் பார்வை**

2.2.1 அறிமுகம் 19

2.2.2 சமூகக் கட்டுப்பாட்டிற்கான காரணிகள் 20

2.2.2.1 குடும்பம் 20-23

2.2.2.2 திருமணம் 24-26

2.2.2.3 கல்வி 26-27

2.2.2.4 சமயம் 28-29

2.2.2.5 சாதி 29

2.2.2.6 உறவுமுறை 30

2.2.2.7 தொடர்பு சாதனங்கள் 30

**2.3. வறுமை தொடர்பான கோட்பாட்டுப்பார்வை**

2.3.1 வறுமை என்பதன் வரைவிலக்கணம் 31

2.3.2 வறுமையை வரையறுப்பதிலுள்ள பிரச்சினைகள் 31-32

2.3.3 வறுமைக்கான காரணங்கள் 32

2.3.4 வறுமையின் வகைப்பாடுகள் 33-34

2.3.5 வறுமையின் விளைவுகள் 35-37

2.3.6 வறுமைச்சக்கரம் 38-39

2.3.7 இலங்கையில் வறுமை பற்றிய கண்ணோட்டம் 39-41

2.3.8 இலங்கையின் வறுமையின் தற்போதைய நிலை 42-43

2.3.9 இலங்கையில் கிராமிய வறுமையின் நிலை 43-45

2.3.10 வடகிழக்கு மாகாணங்களில் வறுமையின் நிலை 46

2.3.11 இலங்கையில் பின்பற்றப்பட்ட வறுமைக் குறைப்பு அணுகுமுறைகள் 46-47

2.3.12 வறுமையைக் குறைப்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் 47-49

2.3.13 உலகலாவிய ரீதியில் வறுமை 49

2.3.14 உலக நாடுகளின் வறுமையைக் குறைக்கும் அபிவிருத்தி முயற்சிகள் 50-52

2.4 கணவனை இழந்த பொண்களும், வன்முறைகளும் கோட்பாட்டுப் பார்வை

2.4.1. பெண்கள் பற்றிய பொதுவான சமூகவியல் நோக்கு 53
2.4.2 அதிகாரத் துஸ்பிரயோகங்களும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் 54
2.4.3 குடும்பச்சுமை 55
2.4.4 கணவணை இழந்த பெண்களும் பாலநிலை வேறுபாடும் 55-57

## அத்தியாயம் மூன்று 58-78

### 3.0 ஆய்வுப் பிரதேச அறிமுகம்

3.1 ஆய்வுப் பிரதேச வரைபடம் 58

3.1.1 ஆய்வுப் பிரதேசம் பற்றிய அறிமுகம் 59-61
3.1.2 கிராமமும் பொருளாதாரமும் 61-63
3.1.3 ஆய்வுப் பிரதேச தரைத்தோற்ற அம்சங்கள் 64
3.1.4 ஆய்வுப் பிரதேசத்தின் காலநிலை அம்சங்கள் 64-65
3.1.5 கிராமத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் 65-69

3.2 ஆய்வுப் பிரதேச சமூகமும் சமூகக் கட்டமைப்பும்

3.2.1 சமூகக் கட்டமைப்பு 70-71
3.2.1.1 சமூகக் கட்டமைப்பில் மக்கள் தொகை 72-73
3.2.1.2 சமூகக் கட்டமைப்பில் சமயம் 73-74
3.2.1.3 சமூகக் கட்டமைப்பில் கல்வி 74-75
3.2.1.4 சமூகக் கட்டமைப்பில் வாழ்வியல் சடங்குகுள் 75
3.2.1.5 ஆய்வுப் பிரதேச திருமண நடைமுறை 76-78

## அத்தியாயம் நான்கு 79-127

### 4.0 ஆய்வுத் தரவுகளும் அதன் பகுப்பாய்வும்

4.1 அறிமுகம் 79

4.1. ஏறாவூர்ப்பற்று கிராம சேவகர் பிரிவுகளும், கணவனை இழந்த பெண்களும் 80-81

4.1.1 ஆய்வுப் பிரதேசத்தில் கணவனை இழந்த பெண்கள் 81-82
4.1.2 ஆய்வுப் பிரதேசத்தில் ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட கணவனை இழந்த பெண்கள் 82
4.1.3 ஆய்வுப் பிரதேசத்தில் கணவனை இழந்த பெண்களும், ஏனைய பெண்களும் 83
4.1.4 கணவனை இழந்த பெண்கள் என்ற நிலையை உருவாக்கும் காரணிகள் 83-89
4.1.5 ஆய்வுப் பிரதேசத்தில் கணவனை இழந்த பெண்களும், உட்கட்டமைப்பு வசதிகளும் 90-93

**4.2 ஆய்வுப் பிரதேசத்தில் கணவனை இழந்த பெண்களும், வறுமையும்**

4.2.1. வருமானமும் வறுமையும் 94-96
4.2.2 கல்வியும் வறுமையும் 97-99
4.2.3 வயதும் வறுமையும் 100-101
4.2.4 தொழிலும் வறுமையும் 102-103
4.2.5 குடும்பமும் வறுமையும் 103-104
4.2.6 குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கையும், வறுமையும் 104-106

**4.3 ஆய்வுப் பிரதேசத்தில் அரச, தனியார் தொழில் அற்ற கணவனை இழந்த பெண்களின் பொருளாதார நடவடிக்கைகள் 106-109**

**4.4 ஆய்வுப் பிரதேசத்தில் கணவனை இழந்த பெண்கள் வறுமை தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**

4.4.1 பொருளாதாரம் ஈட்டல் மற்றும் அதுசார்ந்த பிரச்சினைகள் 109-111
4.4.2 பிள்ளைப் பராமரிப்புத் தொடர்பான பிரச்சினைகள் 112-114
4.4.3 அடிப்படைத் தேவைகள் தொடர்பான பிரச்சினைகள் 115-117
4.4.4 தங்கியிருத்தல் தொடர்பான பிரச்சினைகள் 118-120
4.4.5 உள ரீதியான பிரச்சினைகள் 120-121

**4.5 ஆய்வுப் பிரதேசத்தில் கணவனை இழந்த பெண்கள் எதிர்நோக்கும் சமூக, கலாச்சார ரீதியான பிரச்சினைகள் 121-127**